**சார்பு நீதிமன்றம்,திருத்துறைப்பூண்டி**

**os. 184/2023**

நாள் 10.02.2025

**வா.சா.1. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நானும், பிரதிவாதியும் நீண்ட நாட்களாக நன்றாக தெரியும் என்றால் 2014 ஆம் ஆண்டிலிருந்து தெரியும். அவர் எவ்வாறு தெரியும் என்றால் பிரதிவாதி என்னிடம் இறால் தீவனம் எடுத்து வந்தார். நான் இறால் தீவனம் கடை திருப்பூண்டி மற்றும் பாப்பாகோவில் என்ற இரண்டு கிராமங்களில் கடை நடைத்திவந்தேன். திருப்பூண்டியில் இருந்த கடையின் பெயர் அனுகிராஹா அக்குவா மற்றும் பாப்பாகோவிலில் இருந்த கடையின் பெயர் அமிர்தா அக்குவா என்ற பெயரிலும் இறால் தீவனம் விற்பனை செய்து கடை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி குன்னலூரில் இறால் பண்ணை அமைத்து அதற்கான இறால் தீவனங்களை என்னிடம் 2014ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கொள்முதல் செய்து வந்தார். இறால் தீவனம் எப்போது வாங்கினாலும் பில் போட்டு கொடுத்துவிடுவேன். பிரதிவாதிக்கென்று தனியான வரவு செலவு கணக்கு வைத்திருந்தேன் என்றால் சரிதான். பில் நம்பர், வாங்கிய தொகை, கொடுக்க வேண்டிய தொகை குறிப்பிட்டிருக்கும் என்றால் சரிதான். இறால் தீவனம் கடை நடத்துவதற்கு முறையான உரிமம் உள்ளது என்றால் சரிதான். டின் நம்பர் மற்றும் GST நம்பர் உள்ளது என்றால் சரிதான். வியாபாரம் சம்மந்தமாக பிரதிவாதியிடம் ஏற்படுத்திக்கொண்ட பற்று வரவு கணக்கு சம்மந்தமான கணக்கு வழக்குகளை உரிய முறையில் பராமரித்து தணிக்கை செய்து அதனை வருமான வரி துறையில் கணக்குகள் சமர்பித்து உள்ளேன்., வருமான வரி துறையில் தாக்கல் செய்த பிரதிவாதி தொடர்பான வருமான வரி கணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் எனக்கும் 2014 ஆண்டிலிருந்து எத்தனை முறை பரிவர்தனை நடைபெற்றுள்ளது என்றால் 1வருடத்திற்கு 3 மாதத்திற்கு மட்டுமே இறால் பண்ணையில் குஞ்சிகள் விட்டு பண்ணை நடத்துவதால் 3 மாதத்திற்கும் மட்டுமே என்னிடம் இறால் தீவனம் எடுத்து வருவார். அதுபோல 2014

ஆம் ஆண்டிலிருந்து 2017ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் என்னிடம் தொடர்ந்து இறால் தீவனம் எடுத்து வந்தார் என்றால் சரிதான். இறால் பண்ணை அமைத்து அதற்கான தீவனங்களை தங்களுக்கு சொந்தமான கடையிலிருந்து பிரதிவாதி தொடர்ந்து பெற்று கணக்கு வழக்குகளை வைத்திருந்தாரே தவிர என்னிடமிருந்து தனிப்பட்ட முறையில் எவ்வித கடனும் பெறவில்லை என்றும், வழக்கில் குறிப்பிட்டுள்ள 27.09.2018 தேதியில் ரூ.6,00,000/– பிரதிவாதிக்கு கடனாக தந்ததும் அதற்கு ஆதராமாக வழக்கு சொத்துகளை உட்படுத்தி அடமான கடன் ஆவணம் ஏற்படுத்தி திருத்துறைப்பூண்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 2691/2018 படி பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும் அதன்படி மாதம் 1க்கு ரூ.6,000/– கொடுக்கவேண்டும் என்றும் அந்த அடமான கடன் ஒரு வருட காலத்திற்கு கெடு விதிக்கப்பட்டு அதன்படி பிரதிவாதி எனக்கு பணத்தை கொடுக்காததால் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்ததாகவும் சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி அறிவிப்பு கிடைக்கப்பெற்றவுடன் என்னை நேரில் வந்து சந்தித்தார் என்றும், தாங்கள் அறிவிப்பை தெரியாமல் கொடுத்துவிட்டதாகவும், மேல்நடவடிக்கை எடுக்க மாட்டேன் என உறுதியளித்ததன் பெயரில் பிரதிவாதி எந்த மேல்நடவடிக்கை எடுக்காமலும் , பதிலறிவிப்பு கொடுக்காமல் இருந்துவிட்டார் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. :–**

| |
|---|
| Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.<br><br>Subordinate Judge,<br>Thiruthuraipoondi. |

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.